# வரலாறு

## இராசரட்டை நாகரிகம்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி :- 5.0 இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் தொடர்பான விளக்கம்

தேர்ச்சி மட்டம் 5.2 :- இராசரட்டை நாகரிகத்தின் அரசியல் பொருளாதாரம் சமூகம், கலாச்சாரம், தொழினுட்பம் என்பவற்றை விளங்கல்

## வலகம்பா மன்னன் (வட்டகாமினி)

வட்டகாமினி அபயனின் ஆட்சிக் காலத்தில் முக்கியத்துவத்தை கீழ்வரும் தலைப்புகளின் கீழ் பரிசீலனை செய்க.

01 அரசன் எதிர்நோக்கிய வெளிநாட்டு, உள்நாட்டுச் சவால்களும் அவற்றைக் கட்டுப்படுத்திய விதமும்

02 அபயகிரி விகாரை நிறுவப்பட்டமை

03 திரிபீடகம் எழுத்து வடிவம் பெற்றமை

தொகுப்பு :திருமதி.த.சதீஸ்கரன், ஆசிரியர் - (வரலாறு) (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# 01 அரசன் எதிர்நோக்கிய வெளிநாட்டு, உள்நாட்டுச் சவால்களும் அவற்றைக் கட்டுப்படுத்திய விதமும்

வட்டகாமினி அபய மன்னன் உள்நாட்டு, வெளிநாட்டுச் சவால்களை எதிர்கொண்ட அரசனாவான் இருப்பினும் அவை அனைத்தையும் வெற்றி கொண்டு வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டை மீட்ட அரசன் என்ற வகையில் இலங்கை வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றான்.

⇒ மகாரத்தகனைக் கொலை செய்து அரசைப் பெற்றமை

⇒ தீக பிராமணனின் கிளர்ச்சி

⇒ 7 தமிழர்களின் ஆக்கிரமிப்பு (புலகத்த, பாகிய, பனைமாற,பினையமாற, தாடிகன்)

⇒ கிரி என்ற சமணத்துறவியின் எதிர்ப்பு

⇒ பமினிதியா கடும் பஞ்சத்தை எதிர் கொண்டமை

⇒ தனிமையில் படைகளைத் திரட்டியமை

⇒ படைத்தளபதிகள் அரசைக் கைவிட்டச் சென்றமை



வட்டகாமினி அபயன் என அழைக்கப்படும் வலகம்பா சத்தாதீச மன்னனின் இறுதிப் புதல்வனாவான் இவனுக்கு முன்பதாக தூலதத்தன், லஞ்சதீசன், கல்லாட நாகன் என்ற மூன்று புதல்வர்கள் சத்தாதீசனுக்கு காணப்பட்டனர். சத்தாதீசனுக்குபி பின் தூலதத்தன் அரசனானான். அவனின் பின் லஞ்சதீசன் அவனின் பின் கல்லாடநாகனும் ஆட்சி செய்தான்.

தொகுப்பு :திருமதி.த.சதீஸ்கரன், ஆசிரியர் - (வரலாறு) (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- இச்சமயத்தில் கல்லாடநாகனை கொலை செய்து மகாரத்தகன் என்ற தளபதி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். இக்காலகட்டத்தில் உருகுணைரட்டையை ஆட்சி செய்த வட்டகாமினி விரைந்து வந்து மகாரத்தகனைக் கொலை செய்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். (மகாரத்தகனிள் ஆட்சிக்காலம் 05 நாட்கள்)

- இவ்வாறு ஆட்சிப் பொறுப்பையேற்றுக் கொண்ட வலகம்பா பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. குறிப்பாக நகுல என்ற கிராமத்தில் வசித்த தீக என்ற பிராமணன் வலகம்பாவிற்கு எதிராகக் கலகம் ஒன்றை மேற்கொண்டான். இக் கலகத்தை வலகம்பா அடக்கிய போதிலும் தீக பிராமணரைக் கொலை செய்ய முடியவில்லை. எனவே அவனின் அச்சுறுத்தல் நீங்கவில்லை. இச் சமயத்தில் தென்னிந்தியாவின் பாண்டிய நாட்டைச் சார்ந்த புலகத்த, பாகியன், பணயமாறன், பிணையமாறன் தாடிகன்(ஏழு திராவிடர்) படையெடுத்தனர்.

- இப்படையெடுப்பின் போது வலகம்பா மன்னன் ஓர் தந்திரத்தைப் பயன்படுத்தினான். தீக பிராமணனை அழைத்து தமிழரின் படையெடுப்பை அவன் வெற்றி கொள்வானாக இருந்தால் நாட்டை அவனிடம் ஒப்படைப்பதாகக் கூறிப் போர்க்களத்திற்கு தீக பிராமணனை அனுப்பினான். ஆனால் தமிழர்களுடனான போரில் தீக பிராமணன் மரணமடையவே வலகம்பா போரிற்குச் சென்றான்.

- இவ்வாறு போரிற்குச் சென்று வலகம்பா போர்க்களத்தில் தமிழர்களை எதிர்கொள்ள முடியாமல் தன் மனைவி சோமதேவியுடன் தப்பியோடினார். இவ்வாறு தப்பியோடும் போது குதிரைகள் களைப்பதால் வேகம் குறைவதை உணர்ந்த சோமாதேவி தான் குதிரை வண்டியை விட்டு இறங்கினார். எனவே சோமாதேவியைக் கைவிட்டு வலகம்பா தப்பியோடுகின்ற சந்தர்ப்பத்தில் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்த திராவிடர்களில் ஒருவர் அவள் மீது விருப்பம் கொண்டு அவளைக் கைது செய்து இந்தியா கொண்டு சென்றார்.

- தொடர்ந்து தப்பியோடிய வலகம்பா மன்னனை அநுராதபுர நகரில் அமைந்திருந்த நிகண்ட என்ற சமயப்பள்ளியிலிருந்த கிரி என்ற சமணத்துறவி பெரும் கரும் சிங்கம் ஒன்று தப்பியோடுகின்றது என்று ஏளனம் செய்தார். இவற்றையொல்லாம் பொறுத்த வண்ணம் தப்பியோடிய வலகம்பா தன்னுடன் கொண்டு சென்ற புத்திரின் ஜயற்காலம் (பிச்சாபாத்திரம்) தன் தேரிலிருந்து கீழே தள்ளிவிட்டுத் தப்பியோடினார். ஜயற்கலத்தை எடுத்துக் கொண்ட தமிழர்களில் ஒருவன் அதனுடன் இந்தியா சென்றான்.

- ஏழ்வருள் எஞ்சிய ஐவரும் மகாவம்சக் கூற்றின் படி ஒருவரை ஒருவர் கொலை செய்து 14 ஆண்டுகள் அநுராதபுரத்தை ஆட்சி செய்தனர். இப் 14 ஆண்டுகால ஆட்சியில் 12 ஆண்டு காலம் பஞ்சம் நிலவியது. இப்பஞ்சம் பிரமாண தீகவின் கலவரத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இது பிராமண தீக கலவரம் என அழைக்கப்பட்டது. (பெமினிதியா)




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இப் பஞ்சத்தையும் மன்னன் வலகம்பா எதிர்கொண்டதாகக் கூறப்படுகிறது. மேலும் வலகம்பா எதிரிகளிடமிருந்து தப்பி தம்புள்ள மலைப்பகுதியில் ஒளித்திருந்து படை திரட்டினான். இவனுக்கு குப்பக்கலதிஸ்ஸ மகாதேரர் அனைத்து உதவிகளையும் வழங்கியதாகக் கூறப்படுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் வலகம்பா மன்னனின் செயலால் கோபமடைந்த கபீஷ்கன் உள்ளிட்ட சேனாதிபதிகள் வலகம்பா மன்னனை விட்டு விலகினர். குப்பிக்கல மகாதிஸ்ஸ தேரர் மீண்டும் சேனாதிபதிகளை வலகம்பாவுடன் இணைத்து வைத்துக் கொண்டனர்

இவ்வாறு பாரிய சவால்களை வலகம்பா மன்னன் எதிர் கொண்ட போதிலும் அவற்றையெல்லாம் வெற்றி கொண்டு ஏழு தமிழர்களில் இறுதியாக ஆட்சி செய்த தாடிகனை வென்று மீண்டும் அநுராதபுரத்தில் மன்னாக முடி சூடிக் கொண்டார்.









Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 02 அபயகிரி விகாரை நிறுவப்பட்டமை

- ☑ கி.மு 89ம் ஆண்டு தாடிகனைக் கொண்டு செய்து அநுராதபுரத்தின் ஆட்சியைப் பெற்றதுடன் கிரி என்ற சமணத்துறவியின் பள்ளியை உடைத்து அயகிரி விகாரையை நிர்மாணித்தல்
- ☑ ஒளித்திருந்து படைகள் திரட்டிய போது தனக்கு உதவி செய்த குப்பகலதிஸ்ஸ தேரரிற்கு அபயகிரி விகாரையை கையளித்தல்
- ☑ மகா விகாரையிலிருந்து வெளியேறிய சில பிக்குகள் அபயகிரியில் நுழைந்ததின் ஊடாக சமயத்தில் பிளவு ஏற்பட வழி அமைந்திருந்தது.
- ☑ அரசனின் விசேட ஆதரவு அபயகிரி விகாரைக்குக் கிடைத்தமை
- ☑ பிற்பட்ட காலங்களில் மகாயானக் கருத்துக்கள் அபயகிரி விகாரையை வந்தடைந்தமையும், வெளிநாட்டுப் பௌத்த நிலையங்களுடன் தொடர்புபட்டமையாலும் சர்வதேச பௌத்த மத்திய நிலையமாக அபயகிரி வளர்ச்சியடைந்தது.



தொகுப்பு :திருமதி.த.சதீஸ்கரன், ஆசிரியர் - (வரலாறு) (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வலகம்பா மன்னர் காலம் அநுராதபுரக் காலகட்டத்தில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இக் காலகட்டத்தில் இலங்கையின் மிகப்பெரிய தூபிகளில் ஒன்றான அபயகிரி விகாரை நிர்மாணிக்கப்பட்டது. அபயகிரி விகாரை மாத்திரமின்றி சோமராம விகாரை, தக்கிண விகாரை, முலவொகாச விகாரை, சாளியவிகாரை, பப்பதாராம விகாரை, திஸ்ஸராம விகாரை போன்ற விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டது. இவ் விகாரைகளில் முதன்மை பெறுவது அபயகிரி விகாரை ஆகும்.

அபயகிரி விகாரையானது அண்ணளவாக கி.மு 89 இல் தாடிகனைக் கொலை செய்து ஆட்சியைப் பெற்ற வலகம்பாவால் அமைக்கப்பட்டது. உண்மையில் அபயகிரி விகாரை அமைந்திருந்த இடத்தில் கிரி என்ற சமணத்துறவியின் நிகண்ட என்ற சமணப்பள்ளி காணப்பட்டது. வலகம்பா மன்னன் தோற்று ஓடும் போது கிரி என்ற சமணத்துறவி பெரும் கருஞ்சிங்கம் தோற்று ஓடுகிறதென்று ஏளனம் செய்தார். இதனை ஞாபகத்தில் வைத்திருந்த வலகம்பா தான் ஆட்சி உரிமையைப் பெற்ற சமயத்தில் அச் சமணப்பள்ளியை இடித்து ரூவன் வெலிவாயவுடன் ஒப்பிடக்கூடியளவிற்குப் பிரமாண்டமான அபயகிரி விகாரையை அமைத்தான. பிற் காலங்களில் இது அநுராதபுரத்தின் மிக முக்கியமான கல்வி நிலையங்களில் ஒன்றாக விளங்கியது.

இம் மன்னன் இவ் விகாரையை அமைத்ததன் நோக்கம் தான் ஒளித்திருந்து படை திரட்டிய போது தனக்கு உதவிய குப்பிக்கலமகாதிஸ்ஸ தேரருக்கு ஒரு பிரதியுபகாரமாக இதனை வழங்குவதாகும். இவன் இவ்விகாரையைக் குப்பிக்கலதிஸ்ஸதேரருக்க வழங்கியதால் சங்கத்தின் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால் பௌத்தசமயத்தில் பிளவுகள் தோன்றும் அபாயம் ஏற்பட்டது. இச்சமயத்தில் மகலமகாதிஸ்ஸ என்ற குப்பிக்கலதிஸ்ஸ தேரரின் சீடர் மகாவிகரையிலிருந்து 500பிக்குகளுடன் விலகி அபயகிரிக்குச் சென்றார். இது தமர்மருசி எனும் சமயப்பிரிவு உருவாகக் காரணமாக அமைந்தது. இந்தியாவிலிருந்து வருகை தந்த வஜ்ஜிரபுத்திர பிரிவைச் சேர்ந்தவர்களால் இவ் விகாரை பயன்படுத்தப்பட்டது.

அரசனின் ஆதரவு கிடைத்தமையால் அபயகிரியின் வளர்ச்சியில் தடையேதும் இருக்கவில்லை பிற்பட்ட காலங்களில் மகாயானக கருத்துக்களையுடையோர் அபயகிரிவிகாரையை வந்தடைந்தனர். இதனால் சர்வதேச பௌத்த மத்திய நிலையமாக அபயகிரி வளர்ச்சியடைந்தது.



தொகுப்பு :திருமதி.த.சதீஸ்கரன், ஆசிரியர் - (வரலாறு) (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# 03 திரிபீடகம் எழுத்து வடிவம் பெற்றமை

- ☑ இவ்வரசன் காலத்திலேற்பட்ட கடுமையான பஞ்சம் காரணமாக ஏராளமான மக்கள் இறந்தமையாலும் பௌத்த பிக்குகள் நாட்டை விட்டு வெளியேறியதால் திரிபீடகத்தை நூலுருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.
- ☑ பிராந்திய நிர்வாகிகளின் ஆதரவுடன் மாத்தளை அலுவிகாரையில் திரிபீடகம் மற்றும் அட்டகதா முதற் தடவையாக நூலுருவாக்கப்பட்டது.
- ☑ பல்வேறு சவால்களிற்கு மத்தியில் தேரவாத பௌத்தம் இவரது காலத்தில் பாதுகாக்கப்பட்டது.

வலகம்பா மன்னன் காலத்தில் சமய ரீதியில் மிகுந்த முக்கியம் பெறுவது சமயரீதியான செயற்பாடுகளே ஆகும். குறிப்பாக இவன் ஆட்சியில் நிலவிய பஞ்சம் காரணமாக பெருந்தொகையான பிக்குகள் மற்றும் மக்கள் இறந்தனர். அக்கால கட்டத்தில் திரிபீடகம் (பௌத்த புனித நூல்) எழுத்து வடிவம் பெறவில்லை. மாறாக ஒவ்வொரு குரு பீடப் பரம்பரையிடம் ஒவ்வொரு பகுதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவற்றை மனனம் செய்து பாதுகாத்தனர். ஆனால் பஞ்சம் மற்றும் அந்நிய ஆக்கிரமிப்பால் பெருந்தொகையான பிக்குகள் மரணத்தால் திரிபீடகத்தை மனனம் செய்த குருபீட பரம்பரை அழியும் நிலை தோன்றியது. இதனால் திரிபீடகத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசர தேவை ஏற்பட்டது.

எனவே வலகம்பா மன்னன் கி.பி 1ம் நூற்றாண்டளவில் மாத்தளை அலுவிகாரையில் குப்பிக்கல மகாதிஸ்ஸ தேரர் தலைமையில் ஒன்று கூடிய பௌத்தபிக்குகள் திரிபீடகத்தை நூலுருவாக்கம் செய்தனர். இன்றுவரை திரிபீடகத்தின் எழுத்துருவப் பிரதியாக இதுவே காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பல்வேறு சவால்களுக்கு மத்தியில் திரிாபீடகம் நூலுருவாக்கப்பட்டமை மிக முக்கிய நிகழ்வாக கொள்ளப்படுகிறது அத்துடன் பௌத்த சமயத்தின் வளர்ச்சியில் இது ஒரு முக்கிய கட்டமாகக் கருதப்படுகின்றது.

தொகுப்பு :திருமதி.த.சதீஸ்கரன், ஆசிரியர் - (வரலாறு) (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வசப மன்னன்



- ☑ இலம்பகர்ண வம்சத்தின் முதலாவது மன்னனாவான்
- ☑ இவனது ஆட்சிக்கால ஆவணங்கள் நாடெங்கும் பற்பல பிரதேசங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (யாழ்ப்பாணம், சித்துல்பவ்வ, திஸ்ஸமகாராமையில் குருணாகலை ஆகிய இடங்களில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளமையை உதாரணமாகக் கொள்ளலாம்
- ☑ வல்லிபுரம் பொற்சாசனம், கொடவாய கல்வெட்டு என்பவற்றில் இடம் பெற்ற விடயங்கள்
- ☑ சமய நடவடிக்கைகள் - அதிகமான விகாரைகள் புனரமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.
- ☑ தூபராம தூபிக்கு வட்டதாமனை ஒன்றும், இசுறுமுனிய விகாரையில் போயாமனையும் அமைத்தான்
- ☑ வசப மன்னனுடன் ஆரம்பமான அரசவம்சம் நான்கு நூற்றாண்டுகளுக்கு அண்மியகாலம் வரை நாட்டை ஆட்சி செய்தமை.
- ☑ பெருங்குளம் கட்டுவதில் முன்னோடியாகத் திகழ்ந்தமை (11 குளங்கள்)

Eg :- மகாகணதராவ வாவி, மாகல்கட வாவி

கல்வாய் :- எலஹர / (ஆலிசார)





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மகாசேனன்

- ☑ மகாவிகாரைப் பிக்குகளுடன் கருத்து முரண்பாடு ஏற்படல்
- ☑ அரசனின் மகா விகாரைக்கு எதிரான நடவடிக்கைகளால் மக்கள் அவனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுதல்
- ☑ நிகாய(பிரிவு) பேதத்துக்கு வழி வகுத்தமை
- ☑ சமய, கலாச்சார முன்னேற்றத்துக்குப் பணியாற்றியமை. மின்னேரியா, கோகண்ண, கலந்தக விகாரை, ஜேதவனராம விகாரை போன்ற விகாரைகளைக் கட்டியமை
- ☑ குளங்களும் கால்வாய்களும் அமைத்தமை. நீர்ப்பாசனத்திற்குப் பெரும் தொண்டாற்றியமை



eg:- மின்னோரியாக்குளம், கவுடுலுவாவி, குருளுவாவி, பப்பதன்ன கால்வாய்

- ☑ மின்னேரியா தெய்வம் என சிறப்பிக்கப்பட்டமை





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஒப்படை வினா

மகாவம்சத்தின் ஆசிரியரால் துட்டகைமுனு மன்னனின் செயலாற்றலின் உன்னத தன்மை எடுத்தாளப்பட்டிருக்கும் விதத்தைப் பரிசீலிக்குக.

தொகுப்பு :திருமதி.த.சதீஸ்கரன், ஆசிரியர் - (வரலாறு) (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk